**தெரனியகல பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 21 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 21 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் தெரனியகல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக் கூற்றுக்கள் பிரகார மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 13,137,875 ஆன போதும், உபயோகப் பதிவேடுகள் பிரகார மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 7,443,531 ஆனதில் ரூபா 5,694,344 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்கள் மற்றும் உபயோகப் பதிவேடுகளை இணக்கஞ் செய்து வித்தியாசத்தை சரி செய்ய வேண்டும். | கடந்த காலத்திற்குரிய முற்பணம் தொடர்பான திட்டவட்டமான தகவல்களை கண்டறிவது கடினமாகையால் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு இயலாதிருப்பதாகவும், ஏனைய மீதிகள் தொடர்பாக கணடறிந்து தீர்க்க நடவக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியங்களின் கூட்டுப் பெறுமதி மற்றும் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் அப்பெறுமதிகளிற்கு இடையில் ரூபா 15,791,480 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | இணக்கஞ் செய்து விடயங்களை கண்டறிந்து சரி செய்ய நடவக்கை எடுக்க வேண்டும். | பண்டக கணிப்பீட்டு அறிக்கையில் நிலையான சொத்துக்கள் மற்றும் களஞ்சியங்களின் கூட்டுப் பெறுமதி, நிதிக் கூற்றுக்களின் பெறுமதிகளிற்கு இடையிலான வித்தியாசம் தொடர்பாக விடயங்களை கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 ஆம் பிரிவு | சபை அதிகார எல்லையில் 10 தொலை தொடர்வு கோபுரங்கள் காணப்பட்ட போதும், அதற்காக உப விதி தயாரித்து வரி அறவிட நடவாடிக்கை எடுக்காததால் ரூபா 30,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | பெற வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில், அத் தொலைபேசி நிறுவகளினூடாக வியாபார வரி அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 08 வாகனங்களின் எரி பொருள் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் பிரதேச சபைக்கு சொந்தமான அனைத்து வாகனங்களினதும் எரி பொருள் பரிசீலனையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்தாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 4,683,358 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 7,971,495 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 7,655,840 | 8,504,166 | 6,533,205 | 1,970,962 | 7,877,420 | 8,957,752 | 6,913,454 | 2,044,297 |
| (ii) | வாடகை | 5,799,350 | 7,617,831 | 7,605,243 | 12,588 | 4,709,850 | 5,998,306 | 5.983,777 | 14,530 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 720,100 | 833,028 | 833,028 | - | 647,100 | 753,092 | 753,092 | - |
| (iv) | ஏனைய வருமானம | 154,877,700 | 112,085,824 | 65,292,214 | 46,793,610 | 121,404,880 | 82,909,449 | 37,043,770 | 45,865,679 |

## 2.2.2 விளம்பர அறிவித்தல் வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் நிரந்தரமாக மற்றும் தற்காலிகமாக காட்சிப்படுத்தியுள்ள விளப்பரப் பலகைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டு வருமானம் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விளப்பரப் பலகை தொடர்பாக கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டு வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணிப்பீடு ஒன்றை மேற்கொண்டு நிரந்தர விளம்பரப் பலகைகளிற்கு உரிய கட்டணம் அறவிட தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன். |

## 2.2.3 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டிற்காக 45 நீர் நுகர்வோர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 44,055 இனை அறவிட்டிருக்காததுடன் அவற்றில் ரூபா 30,437 நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டு இருந்தவர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணமாகும். | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை உரிய நேரத்தில் சேகரிக்க நடவடிக்கை எடுக்க வெண்டும். | துண்டிக்கப்பட்ட நீர் விநியோகங்களிற்கு பணம் செலுத்துமாறு அந் நுகர்வோர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 2.2.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற | பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் | பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அழைபித்துக் கொள்ள நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 6,043,781 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 6,950,118 ஆனது. அவ்வாறே ஓராண்டு காலத்தை விஞ்சிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 2,543,781 மற்றும் ரூபா 1,322,450 ஆனது. | மற்றும் முத்திரைக் கட்டணத்தை அழைபித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 3.1 செயலாற்றுகை

----------------------

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

-----------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2001 ஜுன் 26 ஆம் திகதி இடம் பெற்ற மகா சபையில் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணை பிரகாரம் 2001 ஜுலை 27 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுறிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் இலக்கம் 520/7 மற்றும் 1988 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் உள்ளூராட்சி அமைச்சரினால் பகிரங்கப்படுத்தியிருந்த 42 உப விதி வரைபுகளை ஏற்றுக் கொண்டிருந்த போதும் சில உப விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. விளம்பர அறிவித்தல் பிரசுறிப்பது தொடர்பான உப விதியொன்று மீண்டும் வரைபுபடுத்தப்பட்டிருந்த போதும் அதை அங்கீகரித்திருக்காததுடன் அங்கீகரிக்கப்பட்ட உப விதி பிரகாரமும் செயற்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை விதிக்க மற்றும் உரிய முறைப்படி நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | விளம்பர பலகை தொடர்பாக தற்போது வரைந்துள்ள உப விதியை தேவையான திருத்தங்களை மேற்கொண்டு அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பததாகவும் அது வரை உள்ளூராட்சி அமைச்சரினால் பகிரங்கப்படுத்தப்பட்ட 42 உப விதிகளிலான விளம்பர அறிவித்தல் பற்றிய உப விதி பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

(ஆ) **செயல் நடவடிக்கை திட்டம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினூடாக திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் கீழ் ஆண்டினுள் செயற்படுத்த திட்டமிட்டிருந்த பசளை உற்பத்தி, விற்பனை மற்றும் கொம்போஸ்ட் உற்பத்தி தொடர்பாக அறிவூட்டல் ம்றறும் வீட்டு மீள் சுழற்சி வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் எனும் நோக்கத்தை அடைந்து கொள்ள முடியாதிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினூடாக எதிர்பார்த்த இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வீட்டு கொம்போஸ்ட் உற்பத்தி, கழிவுப் பொருள் மீள் சுழற்சி தொடர்பாக வேலை திட்டமொன்றை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |

**(இ) பணிகளை நிறைவேற்றலின் தாமதங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| தெரனியகல பேரூந்து தரிப்பிட அன்மித்த இரண்டு மாடி வியாபார கட்டிடத் தொகுதியின் முதலாம் மாடியை நிர்மாணிப்பதற்கான நிதியை பெற்றுக் கொள்ளவதற்காக முற்செலுத்தற் பணமாக (Key Money) 29 குத்தகைக்காரர்களிடமிருந்து ரூபா 24,299,000 தொகை 2015 ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கை பிரகாரம் 2017 ஆகஸ்ட் 12 திகதியன்று குறித்த கடையறைகளை குத்தகைக் காரர்களுக்கு வழங்க இருந்த போதும், மீளாய்வாண்டு இறுதிவரையும் கட்டிட நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை பிரகாரம் நிர்மாணங்களை விரைவில் பூர்த்தி செய்து நோக்கத்தை அடைந்து கொள்ள வேண்டும். | உடன்படிக்கை காலத்தை நீடிக்காத போதும் கடையறைகளை நிர்மாணித்து முடிந்தவுடன் உடனடியாக குத்தகைக் காரர்களுக்கு அக் கடையறைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

(ஈ) **திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| சபை அதிகார பிரதேசத்தில் தினந்தோறும் 2 டொன் கழிவுப் பொருட்கள் ஒன்று சேர்ந்த போதும், முறையான கழிவுப் பொருள் முகாமைத்துவ வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. பிரதேசத்தில் ஒன்று சேரும் கழிவுகளை | சுற்றாடல் பாதுகாக்கப்படும் விதத்தில் கழிவு பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான வேலை திட்டமொன்று | திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவ மத்திய நிலையமொன்றை ஆரம்பிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அதற்காக பொது மக்களின் |

| | | |
|---|---|---|
| ஒழுங்கீனமாக வெளியிடுவதனால் மழை காலங்களில் கழிவுகள் கிருமினாசிகள், ஏனைய இரசாயண பொருட்கள் மற்றும் கழிவுப் பொருட்கள் ஆற்று நீருடன் கலப்பதால் சுற்றாடலை பாதுகாப்பதற்கான சபையின் பொறுப்பு போதியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்ப்பு ஏற்பட்ட காரணத்தால் சபை கட்டிடம் அமைந்துள்ள காணியின் ஒரு பகுதியில் உயிர் வாயு அலகொன்றை நிர்மாணிக்க தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(உ) சுற்றாடல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சந்தை வளவில் மற்றும் பேரூந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள பொது மலசலகூடங்களிலிருந்து அகற்றப்பட்ட மலசல கழிவுகள் சபை கட்டிட பின் பகுதியில் மைதான ஓரத்தில் குழிகள் வெட்டி வெளியிடப்பட்டு மண் இடப்பட்டிருந்ததுடன், அக் குழிகளில் நீர் தேங்கியிருந்தது. அதன் மூலம் நுளம்புகள் பெறுகி டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்பட்டதுடன் அவ் இடம் சரிவாக அமைந்துள்ளதால் மண்சரிவு அபாயமும் காணப்பட்டது. | மலசல கழிவுகளை வெளியேற்ற சூழல் நேய முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | உத்தேச உயிர் வாயு திண்மக் கழிவு முகாமைத்துவக் கருத்திட்டத்தினூடாக மலசல கழிவுகளை வெளியேற்ற தீர்வு வழங்க எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினுள் 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிடங்களிற்கிடையில் ஆயுள்வேத வைத்திய அலுவலர் பதவியொன்று, தொழிநுட்ப அலுவலர் பதவியொன்று, 03 அபிவிருத்தி அலுவலர் பதவிகள் மற்றும் 04 முகாமை சேவை அலுவலர் பதவிகள் வெற்றிடமாக காணப்படல் சபையின் செயலாற்றல் மீது பொருண்மையான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. | முக்கியமான வெற்றிடங்களை தாமதமின்றி நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்குரிய தகவல்கள் பிரதான அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், வெற்றிடங்கள் காணப்படுவதன் காரணமாக தற்போது சேவையில் உள்ள அலுவலர்களுக்கு ஒப்படைத்துள்ள கடமைகளின் அளவு அதிகரிப்பதால் கடமைகளின் உச்ச உற்பத்தித்திறனை அடைய முடியவில்லை எனவும் அறிவிக்கிறேன். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.3.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2010 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான கால எல்லையினுள் சபரகமுவ மாகாண சபையிலிருந்து கிடைத்திருந்த 04 டெக்டர்களை மீளாய்வாண்டு இறுதி வரையும் சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த வாகனங்களை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண சபைக்கு சொந்தமான டெக்டர்கள் மற்றும் டேலர்களை பிரதேச சபைக்கு சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

#### 3.3.2 வாகன பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பண்டக கணிப்பீட்டு அறிக்கை பிரகாரம் ஏலத்தில் விற்பனை செய்ய பரிந்துரைக்கப்பட்டிருந்த ரூபா 250,000 பெறுமதியான கைடெக்டரை பராதீனம் செய்திருக்கவில்லை. | பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த விலைகளை மற்றும் தர அறிக்கையை பெற்று ஏலவிற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

### 3.4 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கிராம எழுச்சி துரித கிராம அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழான இலுக்தென்ன கீழ் பகுதியில் கோவிலிற்கு மேல் பாதையை அபிவிருத்தி செய்யும் கருத்திட்ட பௌதீக பரிசோதனையின் போது பெற்றுக் கொண்ட அளவைகளை, கொடுப்பனவு அறிக்கையுடன் இணக்கஞ் செய்கையில் 2.8 கொங்கிரீட் கனஅளவிற்கு ரூபா 135,168 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கூடுதலாக செலுத்தியுள்ள தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கூடுதலாக செலுத்தியுள்ள தொகையான ரூபா 135,618 இனை குறித்த வேலையின் நிறுத்தற் பணத்திலிருந்து மற்றும் ஒப்பந்தக்காரரான மட்டுப்படுத்தப்பட்ட தெரனியகல பனாவல பல நோக்கு கூட்டுறவு சங்கத்திடமிருந்தும் மீள் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 4. தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 01 ஏக்கர் 3 ரூட் 30 பர்சஸ் ஆன 03 காணி பங்குகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்யப்படாததால் காணி | பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணியை பரீட்சித்து தற்போதைய விலைகளிற்கு ஏற்ப மதிப்பீடு செய்து பெறுமதியை பெற்றுத் தரவும் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கட்டிடங்களின் பெறுமதி குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | கணக்கீடு செய்யவும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | பல வருடங்களாக முன்கொண்டு வரப்படும் ரூபா 68,600 ஆன நிலுவை வியாபார அனுமதிப்பத்திர கட்டணத்தை அறவிட பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | பழைய ஆண்டொன்றின் நிலுவை தொகை ஆகையால் பெறும்பாளான வியாபாரிகள் கொடுப்பனவு செய்வதனை புறக்கணிப்பு செய்வதால் அறவிடுவது கடினமாகவுள்ளது. |
| (இ) | திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டத்திற்காக பெருந்தோட்ட நிறுவனமொன்றிற்கு சொந்தமான 2 ஹெக்டயார் 35.37 பர்சஸ் ஆன காணி துண்டை சுவீகரிக்கும் ஆரம்ப நடவடிக்கைகளுக்கு 2018 ஜுலை 25 ஆம் திகதி ரூபா 155,000 தெரனியகல பிரதேச செயலாளரிற்கு செலுத்தப்பட்டிருந்தது. 2019 மே 30 திகதி வரை இச் செயற்பாடு முன் கொண்டு வரப்பட்ட போதும், பின்னர் பொது மக்களின் எதிர்ப்பு ஏற்பட்டிருந்ததுடன், அதற்காக மாற்றுக் காணி தொடர்பாக பரிசீலிக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் தொடர்பாக காணியை சுவீகர்த்து கருத்திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணியை சுவீகரிக்க தேவையான நடவடிக்கைகள் மேலும் செயற்படுவதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | பிரதேச சபையினால் சபை அதிகார எல்லையில் விநியோகிக்கும் நீரை ஒழுங்கான சுத்திகரிப்பு முறையின்றி விநியோகிப்பதால் நீண்ட காலமாக நீர் விநியோக சபை உள்ளிட்ட நிறுவனங்களினால் போதிய நீர் விநியோக முறையொன்றை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. உலக வங்கி உதவியின் மூலம் 2016 ஏப்ரல் 01 திகதி முதல் செயற்படும் கேகாலை மாவட்ட நீர் விநியோக மற்றும் சுகாதார மேம்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் நீர் சுத்திகரிப்பு தொகுதியொன்றை நிர்மாணிக்க திட்டமிட்டிருந்த போதும் இது வரை இடமொன்றை இனங்காணல், அளவை வேலைகளை மேற்கொள்ளல் மற்றும் காணியை சுவீகரிக்கும் ஆரம்ப நடவடிக்கைகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வினைத்திறனாக நீர் கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணித் துண்டை சுவீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். |